இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 20-07-2023

# INDIA வை உருவாக்கிய MKS

இந்தியாவுக்கு எதிராக மோடி இருப்பதால், மோடிக்கு எதிராக INDIA அணி திரள்கிறது! நாட்டை நாசமாக்கிய பா.ஜ.க. கூட்டத்துக்கு எதிராக இந்தியா முழுவதும் அணி சேர்ந்துள்ள 26 கட்சிகளின் கூட்டணிக்கு Indian national developmental inclusive alliance - என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இப்படி ஒரு கூட்டணியை இந்தியா முழுமைக்கும் உருவாக்க அயராது பாடுபட்டவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மார்ச் 1–ஆம் நாள் சென்னையில் நடந்த தனது பிறந்த நாள் பொதுக்கூட்டத்தில் பேசும் போது இதற்கான பாதையை வகுத்துக் கொடுத்தார். காஷ்மீரத்து சிங்கம் பரூக் அப்துல்லா அவர்களும், பீகார் மாநிலத்தின் துணை முதலமைச்சர் தேஜஸ்வீ அவர்களும், உத்தரப்பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் அவர்களும் அந்த மேடையில் இருந்தார்கள். பா.ஜ.க.வை வீழ்த்த நினைக்கும் அரசியல் கட்சிகள் எத்தகைய முடிவுக்கு வந்தாக வேண்டும் என்பதை மார்ச் 1 - ஆம் நாளன்றே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள்.

“2024 நாடாளுமன்றத் தேர்தல் என்பது யார் ஆட்சி அமைக்க வேண்டும் என்பதற்கான தேர்தல் அல்ல, யார் ஆட்சி அமைத்துவிடக் கூடாது என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல் ஆகும்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள்.

**“ஒன்றுபட்ட இந்தியாவை வகுப்புவாத பாசிசத்தால் பிளவுபடுத்தி - ஒற்றைத் தன்மை எதேச்சதிகார நாடாக மாற்ற நினைக்கும் பா.ஜ.க.வை அரசியல் ரீதியாக வீழ்த்தியாக வேண்டும் - அது ஒன்று தான் நம்முடைய ஒற்றை இலக்காக இருக்க வேண்டும். ஒற்றைத் தன்மை கொண்டதாக நாட்டை மாற்ற நினைக்கும் பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை இலக்கு கொண்டதாக பா.ஜ.க.வை எதிர்க்கும் அனைத்துக் கட்சிகளும் திட்டமிட்டு ஒன்று சேர வேண்டும். பா.ஜ.க.வை 2024 தேர்தலில் வீழ்த்த நினைக்கும் அனைவரும் ஒன்றாகச் சேர வேண்டும். அந்த ஒற்றுமை உணர்வு வந்துவிட்டாலே வெற்றி பெற்றுவிட்டோம் என்று சொல்லிவிடலாம்” என்று அறிவுறுத்தினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

“மாநிலங்களுக்குள் இருக்கும் அரசியல் வேறுபாட்டை வைத்து, தேசிய அரசியலைத் தீர்மானித்தால் இழப்பு நமக்குத் தான் என்பதை அனைத்துக் கட்சிகளும் உணர வேண்டும். இதனை காங்கிரசு உள்பட அனைத்துக் கட்சிகளுக்கும் சேர்த்தே நான் சொல்கிறேன். தமிழ்நாட்டில் கடந்த நான்காண்டு காலமாக நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றிருக்கிறோம் என்றால் அதற்கு இந்த ஒற்றுமை ஒன்றுதான் அந்த வெற்றிக்கு அடிப்படையாகும். இதனை 2021 ஆம் ஆண்டே சேலம் பொதுக்கூட்டத்தில் அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களை வைத்துச் சொன்னேன். தமிழ்நாட்டைப் போல ஒற்றுமையான கூட்டணியை அகில இந்தியா முழுமைக்கும் அமையுங்கள் என்று சொன்னேன்” என்பதைச் சொல்லிவிட்டு மிக மிக வெளிப்படையாக சில கருத்துகளை அப்போது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

பா.ஜ.க.வை எதிர்க்கும் சில கட்சிகள் காங்கிரசுடன் இணைந்து செயல்படத் தயங்கியது. இதனால் பயனில்லை என்பதையும் முதன் முதலாகச் சொன்னது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான்.

**“அரசியல் கட்சிகள் தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளை மறந்து - விட்டுக் கொடுத்து - பா.ஜ.க.வுக்கு எதிராக ஒன்று சேர வேண்டும். அதே நேரத்தில் சிலரால் காங்கிரசு அல்லாத கட்சிகளின் கூட்டணி என்று சொல்லப்படும் வாதங்களையும் நிராகரிக்க வேண்டும். அது கரை சேராது. தேர்தலுக்குப் பிறகு கூட்டணி வைத்துக் கொள்கிறோம் - என்று சொல்வதும் நடைமுறைக்கு சரியாக வராது. இதனை பா.ஜ.க.வை எதிர்க்கும் கட்சிகள் அனைத்தும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்” - என்று வெளிப்படையாகவே முதலமைச்சர் அவர்கள் அப்போது சொன்னார்கள்.**

**பா.ஜ.க. - காங்கிரஸ் அல்லாத மூன்றாவது அணி முயற்சிகள் அனைத்துக்கும் அன்றைய தினமே முற்றுப்புள்ளி வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். மூன்றாவது அணி நோக்கத்துடன் தன்னைச் சந்தித்தவர்களிடமும் முதலமைச்சர் அவர்கள் இதனை வலியுறுத்தினார். ‘மூன்றாவது அணி என்பது பா.ஜ.க.வுக்கு சாதகமாகவே ஆகும்’ என்பதைச் சொன்னார். இதற்குப் பிறகுதான் மூன்றாவது அணி எண்ணத்தில் இருந்த சில தலைவர்கள் மனம் மாறினார்கள்.**

காங்கிரஸையும் உள்ளடக்கிய கூட்டணியால் மட்டுமே பா.ஜ.க.வை வீழ்த்த முடியும் என்ற சிந்தனையை விதைத்தவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். மார்ச் 1 ஆம் தேதி போட்ட விதை என்பது சூலை 18 அன்று முளைத்திருக்கிறது. Indian national developmental inclusive alliance - என்பதாக முளைத்திருக்கிறது. INDIA வை உருவாக்கியவராக M.K.STALIN உயர்ந்து நிற்கிறார்.

இது நம்மை விட பிரதமர் நரேந்திரமோடிக்கு நன்கு தெரியும். அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் குறி வைக்கப்படுகிறது. அமலாக்கத்துறையை ஏவி விடுகிறார்கள். பெங்களூரு கிளம்பும் முன் ரெய்டு நடத்தினால் பயந்து விடுவார்கள் என்று கணக்குப் போடுகிறார்கள். பாட்னா கூட்டம் முடிந்ததும் மத்தியப்பிரதேசத்துக்குப் போன பிரதமர், அங்கும் தி.மு.க.வை தான் திட்டினார். பெங்களூரு கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது அந்தமான் விமான நிலைய புதிய முனையத்தை காணொளி மூலமாக தொடங்கி வைக்கும் போதும் தி.மு.க.வையே விமர்சித்தார். INDIA வை உருவாக்கியவர் M.K.S. என்பதை அவர் அறிவார். அதனால் தான் இந்தளவுக்கு வன்மம் கக்குகிறார்கள். அமலாக்கத் துறைகளை ஏவுகிறார்கள்.

‘அவர்களால் இன்னும் பல கொடுமைகள் நடக்கும்’ என்பதை எதிர்கொள்ளும் நெஞ்சுரத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். இத்தகைய கொடுமைகளுக்கான தண்டனைகளும் பா.ஜ.க.வுக்கு நிச்சயம் கிடைக்கும்.

●●

## புதுடெல்லி யமுனை ஆற்றில் மீண்டும் வெள்ளம்!

*புதுடெல்லி, ஜூலை 20-* டெல்லியில் பலத்த மழை பெய்ததால் யமுனை ஆற்றில் மீண்டும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அணையின் நீர்மட்டம் 206.01 மீட்டராக அதிகரித்துள்ளது. யமுனை ஆற்றின் இரு கரைகளையும் தாண்டி வெள்ள நீர் செல்வதால் அபாய எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. இதற்கிடையே 45 ஆண்டுகளுக்கு பிறகு யமுனை ஆற்றின் வெள்ளம் தாஜ்மகாலுக்குள் புகுந்தது. தாஜ்மகால் வளாகத்தில் அமைந்துள்ள பூங்காவை மூழ்கடித்தபடி வெள்ளம் செல்கிறது. தாஜ்மகால் சுவரை தொட்டுக் கொண்டும் வெள்ள நீர் செல்கிறது.






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.07.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், தொழிலக மற்றும் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி மேற்கொண்டுவரும் SOL இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் 145 கோடி ரூபாய் முதலீட்டில் இராணிப்பேட்டை – சிப்காட் நிலை 3–ல் திரவ மருத்துவ மற்றும் தொழில் ஆக்சிஜன், திரவ நைட்ரஜன் மற்றும் திரவ ஆர்கான் (Liquid Argon) உற்பத்தியை மேற்கொள்ளுவதற்காக அதிநவீன ஒருங்கிணைப்பு ஆலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, SOL இந்தியா நிறுவனத்தின் தலைவர் குலியோ லாஃபுமாகாலி ரொமாரியோ மற்றும் இந்திய செயல்பாடுகளின் இயக்குநர் எஸ்.வி. வெங்கடேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

*சென்னை, ஜூலை 20-* சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று முதல் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

இன்று முதல் 25.07.2023 வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 29 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக் கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# தி.மு.க. இளைஞர் அணி

## மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

**கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் புதுச்சேரி, காரைக்கால், கேரளா, கர்நாடகா, ஆந்திரா, அந்தமான், மும்பை ஆகிய மாநிலக் கழகங்களுக்கான இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு நேர்காணல் முடிவு மற்றும் உரிய பரிந்துரைகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிர்வாகிகள் நியமிக்கப்படுகிறார்கள்.**

### புதுச்சேரி

**மாநில அமைப்பாளர் :** லீ.சம்பத், எஸ்–3, 4–வது குறுக்குத் தெரு, ஜெயமூர்த்திராஜா நகர், புதுச்சேரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வீ.தமிழ்ப்ரியன் (எ) அன்பில், 3, ஆற்றங்கரை வீதி, கோணாங்குப்பம், புதுச்சேரி. (2) மு.உத்தமன், 33, பி–7–சி, அங்காளம்மன் கோயில் வீதி, அங்காளம்மன் நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி. (3) வழக்கறிஞர் பி.எம்.ரெமி எட்வின்குமார், 16, வீரராகவ முதலியார் தோட்டம், பள்ளிக்கூட வீதி, கோவிந்த சாலை, புதுச்சேரி. (4) வழக்கறிஞர் ஆ.அகிலன், 21, மாரியம்மன்கோயில் வீதி, காட்டேரிக்குப்பம், புதுச்சேரி. (5) தே.தாமரைக்கண்ணன், 206, புதுநகர், கோவிந்த சாலை, புதுச்சேரி. (6) பா.கிருபாசங்கர், 2, 5–வது குறுக்குத் தெரு, வேல் முருகன் நகர், கொசப்பாளையம், புதுச்சேரி. (7) ஜெ.சந்துரு, 44, செல்லபெருமாள் கோயில் வீதி, குயவர்பாளையம், புதுச்சேரி. (8) ப.பஜூலுதீன், 4, பழைய மேட்டுத் தெரு விரிவு, ரஹமத் நகர், சுல்தான்பேட்டை, புதுச்சேரி. (9) ரொ.நித்தின் திமோத்தி, 3, அருளானந்தம் வீதி, கோலாஸ் நகர், புதுச்சேரி. (10) முகிலன் அல்லிமுத்து, 48, கே.டி.குப்பம்பேட் ரோடு, கலிதீர்த்தாள்குப்பம், புதுச்சேரி.

### காரைக்கால்

**மாநில அமைப்பாளர் :** மு.முஹம்மது ரிஃபாஸ், 104, காமராஜ் சாலை, காரைக்கால்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஆ.பாலசந்தர், 15, வடக்குத் தெரு, முப்பயித்தங்குடி, செல்லூர், திருநள்ளார், காரைக்கால். (2) தி.சுப்பிரமணிய பிரபாகரன், 68/1, அம்மன்கோயில் வீதி, திருப்பட்டினம், கீழையூர், காரைக்கால். (3) மு.முகமது ஹாரிஸ், 2, மூன்றாவது குறுக்குத் தெரு, பெசன்ட் நகர், காரைக்கால். (4) அ.ராம்பிரசாத், 34, காமராஜர் சாலை, காரைக்கால். (5) அ.சுரேஷ்குமார், 7, மேரி தெரு, பொன்பேத்தி, நெடுங்காடு, காரைக்கால். (6) வெ.வெற்றிச்செல்வன், 54, சுனாமி நகர், காரைக்கால்.

### கேரளா

**மாநில அமைப்பாளர் :** ரா.பிரின்ஸ், 27/215, அஞ்சலிமுட்டம், சிராக்குளம் ரோடு, கேரளா.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.மது, 30–ஏ, ஆத்மிகா, வடக்கேபுரம் ரோடு, களமச்சேரி, எர்ணாகுளம், கேரளா. (2) விபின் முருகேசன், என்.எம்.சி 26/322, பிரியதர்சினி நகர், நெடுமாங்காடு, திருவனந்தபுரம், கேரளா. (3) ஆர். ஹரிகுமார், டிசி–23/1380, மேலரனூர், கரமணை (அ) திருவனந்தபுரம், கேரளா. (4) ஆலன் டேவிட், ஸாரோன், கரம்கோட்டுக் கோனம், பெயாட் போஸ்ட், திருவனந்தபுரம், கேரளா. (5) மோ.பிரவீன்ராஜ், கோவில் தெரு, இக்கா நகர், மூணார், இடுக்கி, கேரளா.

### கர்நாடகா

**மாநில அமைப்பாளர் :** த.சிவமலை, 19, பி.பி.டி. தெரு 2– வது கிராஸ், முல்பேட், பெங்களூரு, கர்நாடகா.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மா.முருகானந்தன், 61, 4–வது குறுக்குத் தெரு, 22–வது மெயின் ரோடு, கேம்பே கௌடா லே–அவுட், பெங்களூரு, கர்நாடகா. (2) மு.ராஜசேகர், 41, 2–வது குறுக்குத் தெரு, 3–வது பிளாக், தியாகராஜ் நகர், பெங்களூரு, கர்நாடகா. (3) அ.லியோராஜன், 244, 8–வது சாலை, லட்சுமணன்ராவ் நகர், கொரமங்களா, பெங்களூரு, கர்நாடகா. (4) ஐ.முகமது ஆரிஃப், 278, 2–வது குறுக்குத் தெரு, செலிபிரிட்டி லே அவுட், பெங்களூரு, கர்நாடகா. (5) ந.விக்ரம், 3, முதல் தெரு, 2–வது சந்து, சஞ்சய்காந்தி நகர், பெங்களூரு, கர்நாடகா. (6) த.விகாஸ், பொம்மாஹாளி, கணேசா கோவில், பிஜூர் ரோடு, பெங்களூரு, கர்நாடகா.

### ஆந்திரா

**மாநில அமைப்பாளர் :** நா.வெங்கடேசுலு, 1–59, குமரிதெரு, சிந்தாலப் பேட்டை, நகரி, சித்தூர், ஆந்திரா.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கே.எம்.கருணாநிதி, 5–1–191–கோதண்டராமர் கோவில் தெரு, ஏகாம்பரக்குப்பம், நகரி. சித்தூர், ஆந்திரா. (2) வெ.லோகநாதன், 5/26, காமராஜர் தெரு, ஏகாம்பரக்குப்பம், ஆந்திரா. (3) ச.ஆரிஃப் முகம்மது, 9–113, ஆடம் காலனி, நகரி போஸ்ட், சித்தூர், ஆந்திரா. (4) எஸ்.எஸ்.ஹேமச்சந்திரன், 5–2–22, கே.ஆர் கோயில் தெரு, ஏகாம்பரக்குப்பம், சித்தூர், ஆந்திரா. (5) பி.ஜி.என்.சம்பத், 11/1, 2வது கைனிக்கட்டு தெரு, சிந்தாலப் பேட்டை, நகரி, ஆந்திரா.

### அந்தமான் நிகோபார் தீவுகள்

**மாநில அமைப்பாளர் :** இரா.ராஜா, 1, அந்தமான் தமிழர் சங்கம் காம்ப்ளெக்ஸ், எம்.ஏ.ரோடு, அந்தமான் தீவுகள்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.ஜாஹிர் உசேன், பிளாக் 3 , கடை 5 , காந்தி மார்க்கெட், அந்தமான் தீவுகள். (2) ம.விஜயகுமார், டி.டி.ஐ காலேஜ் ரோடு, கரசெர்மா. போர்ட்ஃபிளேயர், அந்தமான் தீவுகள். (3) டி.சுரேஷ்குமார், சி–41–1, டி.டி தெரு, ஹைடு, போர்வெல், அந்தமான் நிகோபார் தீவுகள். (4) ச.கார்த்திக், லம்பாலயன், ராஞ்சி பஸ்தி, சிவன் கோவில் அருகில், டைரி பார்ம், ஜங்லிகாட் போஸ்ட், அந்தமான் தீவுகள். (5) சி.ஸ்ரீகார்த்திக், கோகுலம் ஸ்டோர், கரசெர்மா, போர்ட்ஃபிளேயர், அந்தமான் தீவுகள்.

### மும்பை

**மாநில அமைப்பாளர் :** ந.வசந்தகுமார், ஏ–5, பிளாட் 203, 2–வது தளம், மானசரோவர், பிவண்டி, மும்பை, மகாராஷ்டிரா.

**துணை அமைப்பாளர்கள் :** (1) இரா.கணேசன், பில்டிங்–சி–2, பிளாட்–603, மானசரோவர், பிவண்டி, மும்பை, மகாராஷ்டிரா. (2) பா.உதய்குமார் பாலமுருகன், 102, சஹ்யாத்ரி நிவாஸ், கிசான் நகர், வாக்லே எஸ்டேட், தானே, மகாராஷ்டிரா. (3) கி.வீரமணி, 21–ஸ்ரீநகர், வாக்லே எஸ்டேட், தானே, மகாராஷ்டிரா. (4) அமரன் உத்தமன், 14, ஸ்கூல் காம்பவுன்ட், குர்லா அந்தேரி சாலை, மும்பை– 460 072. (5) சீ.அறிவழகன், 361, இந்திரா நகர், மும்பை கிழக்கு.

‘அன்பகம்’
சென்னை – 18
நாள் : 19–07–2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி